# The 9th ASEAN-India Senior Officials Meeting on Transnational Crimes (SOMTC)

July 21, 2022

---

**எல்லைகளைத் தாண்டி செய்யப்படும் குற்றச்செயல்கள் குறித்த 9-வது ஆசியான்-இந்தியா மூத்த அதிகாரிகளின் ஆலோசனைக்கூட்டம் (SOMTC)**

ஜூலை 21, 2022

எல்லைகளைத் தாண்டி செய்யப்படும் குற்றச்செயல்கள் குறித்த 9-வது ஆசியான்-இந்தியா மூத்த அதிகாரிகளின் ஆலோசனைக்கூட்டம் (SOMTC) 20 ஜூலை 2022 அன்று மெய்நிகர் முறையில் நடைபெற்றது. இந்த கூட்டத்துக்கு இந்திய தரப்பிலிருந்து வெளியுறவு அமைச்சகத்தின் இணைச் செயலாளர் (பயங்கரவாத எதிர்ப்பு) திரு மகாவீர் சிங்வி அவர்களும் ஆசியான் தரப்பிலிருந்து சிங்கப்பூர் உள்துறை அமைச்சகத்தின் துணைச் செயலாளர் (கொள்கை) திரு. பூவா கோக் கியோங் அவர்களும் தலைமை வகித்தனர்.

இரு தரப்பினரும் அனைத்து விதமான பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாத செயல்களையும் கடுமையாக கண்டித்ததோடு, பயங்கரவாதம் மற்றும் எல்லைகளைத் தாண்டி செய்யப்படும் குற்றச்செயல்களை ஒரு முழுமையாகவும் மற்றும் நிலையான முறையிலும் எதிர்த்துப் போராடுவதற்கு சர்வதேச ஒத்துழைப்பை பலப்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

இந்த பேச்சுவார்த்தையின்போது, எல்லைகளைத் தாண்டி செய்யப்படும் குற்றச்செயல்களை எதிர்த்துப் போராடுவதற்கு ஆசியான்-இந்தியா பணித்திட்டத்தின் கட்டமைப்பின் கீழ் பயங்கரவாதம், சட்டவிரோத போதைப்பொருள் கடத்தல், ஆட்கடத்தல், சர்வதேச பொருளாதார குற்றம் மற்றும் சைபர் குற்றங்கள் ஆகிய பகுதிகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வழிகள் குறித்து இரு தரப்பினரும் கலந்துரையாடினர். இரு தரப்பினருக்கும் இடையிலான நிறுவன ரீதியான தொடர்புகள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

எல்லைகளைத் தாண்டி செய்யப்படும் குற்றச்செயல்கள் குறித்த 10-வது ஆசியான்-இந்தியா SOMTC ஆலோசனைக் கூட்டம் 2023 –இல் இந்தோனேசியாவில் நடைபெறும்.

**புது டெல்லி**
**ஜூலை 20, 2022**

DISCLAIMER: This is an approximate translation. The original is available in English on MEA's website and may be referred to as the official press release.